**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

# STC.NO- 387/2023

**Dated :23.03.2026**

**Deposition of witness for : P.W.4**

**List of Witness LW5 Examined as PW4 ( Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | வயது | : | 56 |
| தந்தை பெயர் | : | காளிமுத்து | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | சொக்கநாதப்பட்டி | தொழில் | : | கூலி வேலை |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1 ஆம் எதிரி ஆஜர், 2 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களது சார்பில் BNSS பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 06.01.2023 ஆம் தேதி சொக்கநாதப்பட்டியில் உள்ள தாமோதரன் கொல்லை அருகில் சண்டை நடந்ததாக சொன்னார்கள். மறுநாள் மதியம் சுமார் 3.30 மணியளவில் நான் கூலி வேலை பார்த்துவிட்டு தாமோதரன் கொல்லை அருகே வந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த போலீசார் வரைபடத்தினை என்னிடம் காண்பித்து கையொப்பம் கேட்டார்கள். நானும் சிவசாமி என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சிக் கையொப்பம் என்னுடையது தான் (மேற்படி பார்வை மகஜரில் இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பார்வை மகஜர் எழுதப்பட்டுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றால் சரிதான். அதில் என்ன விவரம் எழுதியுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எந்த தேதியில் என்ன பெயர் கொண்ட போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் 07.01.2023 ஆம் தேதி என்னை விசாரித்தார்கள். போலீசாரின் பெயர் தெரியவில்லை.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.23 12:21:19 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**